# ERODE DISTRICT AMATEUR KABADDI ASSOCIATION

(Affiliated to Tamilnadu Amateur Kabaddi Association)

No. 60, Saradhamariamman Kovil Street, Gobichettipalayam, Erode - 638 452.

Chairman
S.K.Ramasamy. LIC
Sundakkapalayam

President
P.Rajakumar
Gobichettipalayam
97892 23379
yazhinirajkumar2000@gmail.com

Secretary (Incharge)
A.C.Thangavel
Joint Secretary
Chennimalai
99415 21256

Treasurer
P.Vijayakumar
Erode
98427 53547

Organizing Secretary
K.Gangadharan
Erode
K.Velliangiri
Chennimalai

DATE : 28.04.2026

## ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷன் விதிமுறைகள் (விழா கமிட்டிக்கு)

1. AKFI மற்றும் நமது மாவட்ட கபாடி கழகத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு தான் போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.

2. முறையாக மாவட்ட கபாடி கழகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பதிவு செய்த பின்பு தான் போட்டிகள் நடத்தப்பட வேண்டும். பதிவு செய்யாமல் போட்டிகள் நடத்தினால் அக்கமிட்டியின் மீது மாவட்ட கபாடி கழகத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

3. மாவட்ட அளவிலான கபாடி போட்டிக்கு மாவட்ட கபாடி கழகத்திற்கு ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) போட்டி கட்டணம் செலுத்த வேண்டும்.

4. போட்டி நடத்தும் குழு தங்கள் அணியை மாவட்ட கபாடி கழகத்தில் ரூ.200/- (ரூபாய் இருநூறு மட்டும்) பதிவு கட்டணம் செலுத்தி பதிவு செய்ய வேண்டும்.

5. மாநில அளவிலான தென்னிந்திய மற்றும் அகில இந்திய அளவிலான கபாடி போட்டிகள் நடத்தும் போது மாவட்ட கபாடி கழகத்திற்கு முறையே மாநில அளவிலான தென்னிந்திய / அகில இந்திய போட்டிக்கு ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) போட்டி கட்டணம் செலுத்த வேண்டும்.

ஈரோடு மாவட்டத்தில் விளையாடும் கபடி அணிகள் ஒவ்வொரு வருடமும் ரூ.200/-ஐ மாவட்ட அமெச்சூர் கபடி கழகத்தில் செலுத்தி பதிவு செய்ய வேண்டும்.

6. போட்டிகள் நடத்தப்படும் நாட்கள், போட்டிகளில் கலந்து கொள்ளும் அணிகளின் எண்ணிக்கை,போட்டிகள் நடத்தப்படும் ஆடுகளங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாவட்ட கபாடி கழகத்திலிருந்து நடுவர்கள் அனுப்பி வைக்கப்படுவார்கள்.

7. கபாடி நடுவர்கள் தங்குவதற்கு தங்கும் இடம், உணவு வசதி ஏற்பாடு செய்து தரப்பட வேண்டும்.

8. ஒரு மைதானம் வைத்து போட்டி நடத்தினால் 35 முதல் 45 அணிகளுக்கு மட்டும் விளையாட அனுமதி வழங்கப்படும் (6 நடுவர்கள்).

9. இரண்டு மைதானங்கள் வைத்து போட்டி நடத்தினால் 70 முதல் 80 அணிகளுக்கு மட்டும் விளையாட அனுமதி வழங்கப்படும் (11 நடுவர்கள்).

10.ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி கழகத்தால் அறிவித்துள்ள படி, விழா கமிட்டி பரிசுத்தொகைக்கு ஏற்ப அணிகளிடம் நுழைவுக்கட்டணம் வசூலிக்க வேண்டும்.

11. ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி கழகத்தால் நிர்ணயிக்கப்பட்ட நடுவர் சம்பளம் நடுவர்களுக்கு வழங்க வேண்டும்.

12. அனைத்து விதிமுறைகளுக்கும் விழா கமிட்டி ஒத்துழைப்பு வழங்குவோம் என்று கூறினால் மட்டுமே கபாடி போட்டி சிறப்பாக நடத்த பதிவு வழங்கப்படும்.

13. ஆடுகளங்கள் விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளுக்கு காயம் ஏற்படாவண்ணம் AKFI விதிமுறைப்படி அமைக்கப்பட வேண்டும், மேலும் போட்டிகள் அனைத்தும் AKFI விதிமுறைகள் படி நடத்தப்பட வேண்டும்.

14. முன்கால்கட்ட போட்டிகளுக்கு (Pre-Quarter Final) தகுதி பெறும் 16 அணிகளுக்கு குலுக்கல் முறையில் போட்டி கால அட்டவணை (Fixtures) தயார் செய்யப்பட வேண்டும்.

15. விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகளுக்கு தங்குமிடம், உணவு வசதி செய்து தர வேண்டும்.

16. போட்டி நடத்துபவர்கள், நடுவர்களுக்கான பணிக்கட்டணம் மற்றும் பரிசுத்தொகைகளை, கால்கட்டப் போட்டிகள் ஆரம்பிக்கும் போது ஏற்பாடு செய்து மாவட்ட கபாடி கழக நிர்வாக குழு உறுப்பினர் அல்லது தலைமை நடுவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

17. இரண்டு நாட்கள் நடைபெறும் கபாடி போட்டியில் முதல் நாள் இரவு 12 மணிக்கு மேல் கண்டிப்பாக அணிகள் பதிவு செய்யக் கூடாது, மேலும் 2-ம் நாள் இரவு 11 மணிக்குள் போட்டிகள் முடிக்கப்பட்டு பரிசளிப்பு நடைபெற வேண்டும்.

18. போட்டி நடத்தப்படும் போது மழை மற்றும் இதர இயற்கை இடையூறுகளால் போட்டி தடைபடும் போது, நடுவர்கள் மற்றும் போட்டி நடத்துபவர்கள் தன்னிச்சையாக முடிவெடுக்காமல் மாவட்ட கபாடி கழகத்தை கலந்து ஆலோசித்து முடிவு எடுக்க வேண்டும்.

19. விளையாட்டு மைதானத்தில் தேவையான மருத்துவ உபகரணங்களும், நடுவர்களுக்கு தேவையான பாதுகாப்பு வசதிகள், முதலுதவி பொருட்கள் ஆகியவற்றை ஏற்பாடு செய்திடல் வேண்டும்.

20. பெண்கள் கபாடி போட்டியினை நடத்தும் விளையாட்டு குழுக்கள், அவர்கள் தங்குவதற்கு நல்ல பாதுகாப்பு வசதியினை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

21. இரவு 12 மணிக்குள் நுழைவு கட்டணம் செலுத்தி, அணியின் 10 வீரர்கள் கொண்ட குழு புகைப்படம் எடுத்துக்கொள்ளும் அணிகளுக்கு மட்டும் போட்டியில் கலந்து கொள்ள பதிவு வழங்கப்பட வேண்டும்.

22. வெளிமாவட்ட அணிகள் இரவு 2.00 மணிக்குள் போட்டி நடக்கும் விளையாட்டு மைதானத்திற்கு வந்து தங்கள் அணியின் குறைந்தது 10 வீரர்களுடன் குழு புகைப்படம் எடுத்து நுழைவுக்கட்டணம் செலுத்திய பின்பு தான் பதிவு தரப்பட வேண்டும்.

23. உள்ளூர் அல்லது கமிட்டி அணியின் அனைத்து வீரர்களும் இரவு 12 மணிக்குள் விழா திடலில் கண்டிப்பாக குழு புகைப்படம் எடுத்து முறையாக தங்கள் அணியின் வருகையை பதிவு செய்ய வேண்டும்.

24. மேட் வைத்து போட்டி நடத்தும் போது மண்தரை தளம் சமப்படுத்தி மேடு, பள்ளம் இல்லாதவாறு மேற்கூரை அமைத்து போட்டி நடத்த வேண்டும்.

25. ஒவ்வொரு போட்டியிலும், போட்டி துவங்கும் நாள் இரவு 12 மணிக்குள் வராத ஈரோடு மாவட்ட அணிகளோ அல்லது 2 மணிக்கு மேல் வருகை தரும் பிற மாவட்ட அணிகளோ காலதாமதமாக வந்து பதிவு மறுக்கப்படும் போது விழா கமிட்டி பெயரில் இடம் பெற்று விளையாடுவது அனுமதிக்கப்பட மாட்டாது.

26. விளையாட்டு வீரர்களுக்கு தங்குமிடம் மற்றும் கிராமமாக இருப்பின், அப்பகுதி பேருந்து நிலையங்களில் இருந்து மைதானத்திற்கு வாகன வசதி ஏற்பாடு செய்ய வேண்டும்

Chairman
S.K.Ramasamy. LIC
Sundakkapalayam

President
P.Rajakumar
Gobichettipalayam
97892 23379
yazhinirajkumar2000@gmail.com

Secretary (Incharge)
A.C.Thangavel
Joint Secretary
Chennimalai
99415 21256

Treasurer
P.Vijayakumar
Erode
98427 53547

Organizing Secretary
K.Gangadharan
Erode
K.Velliangiri
Chennimalai

27. கமிட்டி அணி உள்ளூர் வீரர்களைக் கொண்டு இருந்தாலும் நேரிடையாக முன் கால் கட்ட (pre-quarter final) போட்டிக்கு செல்வதை அனுமதிக்கப்பட மாட்டாது

28. போட்டி கால அட்டவணையை ஈரோடு மாவட்ட கபாடி கழக நிர்வாகக்குழு உறுப்பினர், தலைமை நடுவர், போட்டி நடத்தும் அணித்தலைவர் ஆகியோர் முன்னிலையில் போட வேண்டும்.

29. ஒவ்வொரு பகுதியிலும் விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்த விழாக்குழுவினரால் நடத்தப்படுகின்ற கபாடி போட்டி வெளிப்படைத் தன்மையாகவும், பாரபட்சமின்றியும் நடத்தப்பட வேண்டும்.

30. வளர்ந்து வரும் அணிகளுக்கு முன்னுரிமை" என்று நோட்டீஸில் போடுவதை தவிர்க்க வேண்டும், உண்மையிலேயே வளர்ந்து வரும் அணிகளுக்கான போட்டியாக எடைப்பிரிவு 45Kg,55Kg,65Kg என்று போட்டி நடத்த வேண்டும். அப்படி எடைப்பிரிவு போட்டி நடத்தினால் மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

31. எடைப்பிரிவு போட்டி நடத்துபவர்கள் உள்ளூர் அணிக்கு எடை கிடையாது என்று தங்களுக்கு தனி விதிமுறை ஏற்படுத்தக் கூடாது.

32.45 Kg, 55 Kg எடைப்பிரிவு போட்டி நடத்தும் அனைத்து விழா கமிட்டிக்கும் ரூபாய் 5000 மதிப்புள்ள முதல் 4 இடங்களுக்கான வெற்றிக் கோப்பைகளும், 4 கால் கட்ட பரிசு கோப்பைகளும் இலவசமாக வழங்கப்படும்.

32. 45Kg,55Kg எடைப்பிரிவு போட்டி நடத்தும் அனைத்து விழா கமிட்டிக்கும் ரூபாய் 5000 மதிப்புள்ள முதல் 4 இடங்களுக்கான வெற்றிக் கோப்பைகளும், 4 கால் கட்ட பரிசு கோப்பைகளும் இலவசமாக வழங்கப்படும்.

# ERODE DISTRICT AMATEUR KABADDI ASSOCIATION
(Affiliated to Tamilnadu Amateur Kabaddi Association)
No. 60, Saradhamariamman Kovil Street, Gobichettipalayam, Erode - 638 452.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| S.K.Ramasamy. LIC | P.Rajakumar | A.C.Thangavel | P.Vijayakumar | K.Gangadharan |
| Sundakkapalayam | Gobichettipalayam<br>97892 23379<br>yazhinirajkumar2000@gmail.com | Joint Secretary<br>Chennimalai<br>99415 21256 | Erode<br>98427 53547 | Erode<br>K.Velliangiri<br>Chennimalai |


33. தொடர்ந்து ஈரோடு மாவட்டத்தில் 45Kg,55Kg எடைப்பிரிவு போட்டி நடத்தும் விழாக்கமிட்டிகளுக்கு ஊக்கமும் நல் ஒத்துழைப்பும் வழங்கப்படும்.

34. குறிப்பாக, தன்னிச்சையாக விழா குழு ஏதேனும் முடிவெடுத்து விதிமுறைகளை மீறியும் தவறான வழியிலும் போட்டிகள் நடத்தினால் எந்த அணிகளையும் விளையாட அனுமதிக்க மாட்டோம் எந்த சமரசமும் இன்றி கலந்து கொண்ட அனைத்து அணிகளும் தொடர்ந்து விளையாடாமலும் நடுவர்கள் அனைவரும் பணி புரியாமலும் திரும்ப அழைக்கப்படுவார்கள்.

35. கபாடி போட்டியினை மிகவும் அமைதியான முறையிலும், பாதுகாப்பான முறையிலும் நடத்தப்பட வேண்டும்.

36. ஈரோடு மாவட்டத்தில் விளையாடும் அனைத்து அணிகளும் கபாடி போட்டி நடத்தும் அனைத்து குழுக்களும் EDAKA விதித்துள்ள அனைத்து விதிமுறைகளையும் பின்பற்றி நடக்க வேண்டும்.

37.கபாடி விளையாட்டின் வளர்ச்சி வீரர்களின் நலன் இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து உண்மை,உழைப்பு,உயர்வு,ஒழுக்கம் ,காலநேரம் தவறாமை ,வாய்மை ,அன்பு,பண்பு ,பாசம் இவற்றை மனதில் கொண்டு வீரர்களும் விழாக்கமிட்டியும் அறவழியில் பயனிக்க வேண்டும்.

தலைவர்

28/04/2026

(பெ.ராஜகுமார்)
ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷன்.
செயலாளர்(பொறுப்பு) / பொருளாளர் மற்றும் நிர்வாகிகள்.

P. RAJAKUMAR
PRESIDENT
Erode Dt. Amateur Kabaddi Association
ERODE - 638 452.